# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை: திரு. A.S. அமீர்தீன், B.A., B.L.,L.L.M., D.JJJ.Psy.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி. (முழு கூடுதல் பொறுப்பு)

திருவள்ளுவராண்டு 2053, ஸ்ரீ சுபகிருது வருடம் ஐப்பசி திங்கள் 10-ஆம் நாள்

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 நாள் வியாழக் கிழமை

**அசல் வழக்கு எண்.03/2021**

(CNR No.TNTV06-000007-2021)

1. ரவிச்சந்திரன்

2. ராமசந்திரன் ... வாதிகள்

/ எதிர் /

1. கோச்மேன்

2. பாலையன்

3. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை

4. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர்,

திருவாரூர். ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G. ஜீவானந்தம் அவர்களும் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.V.சச்சிதானந்தம் அவர்களும் முன்னிலையான நிலையில், பட்டியலில் போடப்பட்டிருந்த இவ்வழக்கில் வாதிகளை அழைத்தும் வருகையில்லாததால், வாதிகளின் தவறுகைக்காக இவ்வழக்கை தள்ளுபடி செய்து இன்று (27.10.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

வழக்குரை சொத்து விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து 1வது எதிர்வாதி பெயரில் 2வது எதிர்வாதியால் 15.12.2020 தேதியில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதும் உள்ளிக்கோட்டை சார்பதிவக ஆவண எண்.1233/2020 என்று

பதிவாகியுள்ள கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்று விளம்புகை செய்து உத்தரவிற்காகவும் மற்றும் வழக்குரை சொத்து விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து 1வது எதிர்வாதி பெயரில் 2வது எதிர்வாதியால் 15.12.2020 தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதும் உள்ளிக்கோட்டை சார் பதிவக ஆவண எண்.1233/2020 என்று பதிவாகியுள்ள கிரய ஆவணம் பதிவை 3வது எதிர்வாதி சார்பதிவாளர் அலுவலக ஆவணப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்று ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் 1வது மற்றும் 2வது எதிர்வாதிகளோ அல்லது மேற்படி எதிர்வாதிகளின் அதிகாரம் பெற்ற நபர்களோ வழக்கு சொத்துக்குள் சட்ட முரணாக அத்துமீறி பிரவேசிக்கவோ, ஆக்கரமிக்கவோ, வாதிகளின் அனுபவத்தை எந்த வகையிலும் தடை செய்யவோ கூடாது என்று ஒரு நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் வழக்கு செலவுத் தொகையை எதிர்வாதிகள் செலுத்திவைக்கவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Today posted for trial in list. The plaintiff not turned up. Hence, today this suit is dismissed for default. Connected miscellaneous petition if any remains stands closed.

இந்த தீர்ப்பு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (27.10.2022) அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2022.10.27 18:13:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி. (மு.கூ.பொ.)